# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


"'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.' இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை. 'உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக' என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை. (மத் 11:37-39)

# உலக அமைதிக்காக, பன்னாட்டு பல்சமயத் தலைவர்கள் இறைவேண்டலில் இணைந்தனர் -திருத்தந்தை தலைமையேற்றார்

வத்திக்கான்: 1986ம் ஆண்டு, திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் உலகின் பல்வேறு மதத் தலைவர்களுடன், அமைதிவேண்டி, அசிசி நகரில் மேற்கொண்ட ஒரு பல்சமய கூட்டத்தைத் தொடர்ந்து, சான் எஜீதியோ என்ற பிறரன்பு அமைப்பு, ஒவ்வோர் ஆண்டும், அமைதிக்காக வேண்டும் இறைவேண்டல் நாளை ஏற்பாடு செய்து வந்துள்ளது.

"எவரும் தனியாகக் மீடக்கப்படுவதில்லை மற்றும், உடன்பிறந்த உணர்வு" என்ற தலைப்பில், இவ்வமைப்பினர், இவ்வாண்டு அக்டோபர் 20, கடந்த செவ்வாயன்று, 34-வது இறைவேண்டல் நாளை, உரோம் நகரில் உள்ள Campidoglio குன்றில் ஏற்பாடு செய்திருந்தனர்.

கான்ஸ்தாந்திநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும்தந்தை முதலாம் பர்த்தலோ மேயோ, இங்கிலாந்து ஆங்லிக்கன் சபையின் கான்டர்பரி பேராயர் ஜஸ்டின் வெல்பி, ஆகியோருடன், இந்து, முஸ்லீம், சீக்கிய சமயத்தலைவர்கள் கலந்து கொண்ட இந்த இறைவேண்டல் கூட்டத்தைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில், கோவிட்-19 கொள்ளைநோய் மற்றும் போர்களில் இறந்தோரை நினைவுகூர்ந்து, ஒரு நிமிட அமைதி காத்ததற்குப்பின், அமைதி அறிக்கை வாசிக்கப்பட்டது.

வழக்கமாக, இந்த இறைவேண்டல் முயற்சியில் 50 நாடுகளைச் சேர்ந்த மதத்தலைவர்கள் கலந்துகொள்வது வழக்கம்



என்றாலும், இவ்வாண்டு, கோவிட்-19 கொள்ளைநோயின் தாக்கத்தால், பல்வேறு மதத்தலைவர்கள், இணையத்தின் வழியே பங்கேற்றனர்.

இக்கூட்டத்தின் இறுதியில், அனைத்து மதத்தலைவர்களும் இணைந்து அமைதி அறிக்கையில் கையெழுத்திட்டு வெளியிட்ட வேளையில், அவர்கள் ஒவ்வொருவரும் அமைதி விளக்கையும் ஏற்றி வைத்தனர்.

மதத்தலைவர்களுடன் இணைந்து, பல்வேறு நாட்டைச் சேர்ந்த இளையோர், தங்கள் பாரம்பரிய உடைகளில் மேடையில் தோன்றி, அவர்களும் விளக்கேற்றி வைத்தனர். பல்வேறு நாடுகளின் தூதர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இத்தாலிய அரசுத்தலைவர், Sergio Mattarella அவர்களும், இந்த விளக் கேற்றும் நிகழ்வில் பங்கேற்றார்.

இறுதியில், அனைவரும் ஒருவருக் கொருவர், அமைதியைப் பகிர்ந்து கொள்ளும் அடையாளமாக, கரங்களைக் கூப்பி வணக்கம் தெரிவித்தபின் கலைந்து சென்றனர்.

2016ம் ஆண்டு, அசிசி நகரில் நடைபெற்ற இந்த அமைதி இறைவேண்டல் நிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கலந்துகொண்டார் என்பதும், இவ்வாண்டு, மார்ச் 27ம் தேதி, காலியாக இருந்த வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நடத்திய சிறப்பு Urbi et Orbi வழிபாட்டில் "எவரும் தனியாகக் மீட்கப்ப்படுவதில்லை. நாம் அனைவரும் ஒரு படகில் பயணம் செய்கிறோம்" என்று கூறிய சொற்கள், இவ்வாண்டு நடைபெற்ற இறைவேண்டல் வழிபாட்டிற்கு மையக்கருத்தாக அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கன. (Zenit)

*ஜெரோம் லூயிஸ்-வத்திக்கான்*

# 'கிறிஸ்து வாழ்கிறார்' இணையத்தளக் கருத்தரங்கு

ஜோகூர்: மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட இளைஞர்களின் இணையத்தலம் MJDYPN) திருத்தந்தையின் மறைத்தூது மடலான் 'கிறிஸ்து வாழ்கிறார்' (Post-synodal Apostolic Exhortation) எனும் ஆவணத்தையொட்டி இயங்கலை வாயிலாக கருத்தரங்கு நடத்துகிறது. இந்த ஆவண மானது இளைஞர்களுக்கும் அனைத்து இறைமக்களுக்குமான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தியாகும்.

ஒவ்வொரு மாதமும், ஒரு குறிப்பிட்ட மொழியில் ஜூம் (Zoom) வாயிலாக தொடர்ச்சியான கருத்தரங்குகள் நடைபெறும். இதன்படி, ஆகஸ்டில் ஆங்கிலத்தில், செப்டம்பரில் மலேசிய மொழியில், அக்டோபரில் மாண்டரின் மற்றும் நவம்பரில் தமிழ்மொழியில் இக்கருத்தரங்கு மேற்கொள்ளப்படும். பங்கேற்பாளர்கள் 13-17 வயது, 18-24 வயது மற்றும் 25ம்- அதற்கு மேற்பட்ட வயதும் என மூன்று வெவ்வேறு வயதினராகப் பிரிக்கப்படுவார்கள்.

இந்த நிகழ்ச்சிக்காக, மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அர்ப் பணிப்புள்ள சொற்பொழிவு குழுவினர் புதிய நற்செய்தி அறிவிப்பாளர்களாகப் பணியேற்கப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இவர்கள் 'கிறிஸ்து வாழ்கிறார்' எனும் இந்த இயங்கலை வழி கருத்தரங்கை வழிநடத்தப் பொறுப்பேற்பார்கள்.

'கிறிஸ்து வாழ்கிறார்' தொடர்பான தங்கள் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள உதவுவதற்காக மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பயிற்றுனர்களோடு, கோலாலம்பூர், பினாங்கு, கெனிங்கா மற்றும் சண்டக்கான் மறைமாவட்டங்களிலுள்ள பயிற்றுனர்களின் உதவியும் நாடப்படும்.

இத்திட்டத்தின் மூலம், இந்த பயன்மிக்க ஆவணத்தை அறிந்துணரவும், கிறிஸ்து அவர்களின் வாழ்க்கையில் உண்மையிலேயே உயிரோடு இருப்பதை உணர்ந்து செயல்படுவதற்கும் அதிகமானவர்கள் இக்கருத்தரங்கில் இணைவர் என்று எதிர்ப்பாரக்கப்படுகிறது.

குறிப்பு:

* தமிழ் மொழியில் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள விழைவோருக்கான பதிவு

இப்போது திறக்கப்பட்டுள்ளது




* பதிவு படிவத்தை பெற கீழேயுள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும் .

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSfPZ77_F7edYulCCkHSFAEjW3QNqPaVfeBfKMFTAs50O9HnRQ/viewform

மேல் விபரங்களுக்குக் கீழ்க்கண்டோருடன் தொடர்புகொள்ளவும்

Francisco @ 01111891492
Aloysius @ 01136401984
Julie @ 0146203341
Daryl @ 0142274785

# வாரம் ஓர் அலசல்: அனைவரும் உடன்பிறந்தோர் - 'FRATELLI TUTTI' - பகுதி 3

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மூன்றாவது திருமடலாக வெளிவந்துள்ள "அனைவரும் உடன்பிறந்தோர்" என்ற திருமடலின் தொடர்ச்சி ....

**பகுதி**
**அனைவரும் உடன்பிறந்தோர் -**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "அனைவரும் உடன்பிறந்தோர்(Fratelli Tutti)" என்ற மேற்கண்ட புதிய திருமடலின் ஐந்தாவது பிரிவில், **"சிறந்ததோர் அரசியலை", "மதிப்புமிக்க அரசியலை"** எவ்வாறு அமைப்பது என்பது பற்றி, அருமையான சிந்தனைகளை வழங்கியுள்ளதோடு, அரசியலில் பணியாற்றும் அனைவருக்கும் தன் விண்ணப்பங்களையும் அதில் விடுத்துள்ளார்.

"சிறந்ததோர் அரசியல்" என்பது, பிறரன்பின் மிக மதிப்புமிக்க வடிவங்களில் ஒன்றாகும். அது, பொது நலனுக்குப் பணியாற்றுவதற்கு தன்னை அர்ப்பணித்திருப்பதாகும் (எண்180) மற்றும், மக்களின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, கலந்துரையாடலுக்குத் திறந்த மனம் கொண்டிருப்பதாகும் (எண் 160) என்றுரைக்கிறார்.

"சிறந்ததோர் அரசியல்" என்பது, வறியோருக்கு பணத்தால் அல்ல, வேலை வாய்ப்பு வழியாக, அவர்கள் மாண்புள்ள வாழ்வைக் கொண்டிருப்பதற்கு உதவுவதாகும். ஏழ்மைக்கு எதிரான உண்மையான யுக்தி என்னவென்றால், ஏழைகளுக்கு ஒருமைப்பாட்டு உணர்வும், உதவிகளும் கிடைப்பதற்கு வழியமைப்பதாகும் என்கிறார் திருத்தந்தை.

சிறந்ததோர் அரசியலின் பணி என்னவென்றால், சமுதாயத்தில் தனிமைப்படுத்தல், மனித உறுப்புக்கள், திசுக்கள், போதைப்பொருள்கள் ஆகியவற்றை வர்த்தகம் செய்தல், பாலியல் வன்கொடுமை, அடிமைத்தொழில்முறை, பயங்கரவாதம் போன்ற அடிப்படை உரிமைகளைத் தாக்கும் பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வு காண்பதாகும் என்று



மேலும் வலியுறுத்துகிறார்.

இவ்வாறு தனது திருமடலில் கூறியுள்ள திருத்தந்தை, மனித வர்த்தகம், மனித சமுதாயத்திற்கு வெட்கத்தைத் தரும் செயலாக உள்ளது மற்றும், உணவு, மனிதரின் தவிர்க்க முடியாத உரிமையாக இருப்பதால், பசி, ஒரு குற்றச் செயலாகும் என்று சொல்லி, இவையிரண்டும் முற்றிலுமாக அகற்றப்படவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

*ஆர்.கே.*

# மலேசிய கத்தோலிக்க இளையோர் செயலவை தியானத்தில் இணைந்தது

மலேசிய கத்தோலிக்க இளைஞர் பணிக்குழு இயங்கலை (onlone) வாயிலாக அதன் முதல் பொதுக்கூட்டத்தையும் தியானத்தையும் zoom வாயிலாக மேற்கொண்டது. மலேசியாவின் ஒன்பது மறைமாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர் பணிக்குழுக்களின் பொறுப்பளார்கள் சரவாக், மிரியில் பொதுக் கூட்டத்திற்காகவும் ஆண்டு தியானத்திற்காகவும் ஒன்றுகூட திட்டமிட்டிருந்த வேளையில், கோவிட்-19-ன் காரணமாக இயங்களை வாயிலாக தங்களது கூட்டத்தையும் தியானத்தையும் மேற்கொண்டனர்.

பேராயர் சைமன் போ அவர்களுடன் zoom வாயிலாக மேற்கண்ட நிகழ்வுகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு ஆங்காங்கே பல நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாகவும் கோவிட்-19-ன் தாக்குதலின் காரணமாக அனைத்தும் முடக்கம் கண்டதாகப் பேராயர் தெரிவித்தார்.

தியானத்தில் கலந்துகொண்ட பொறுப்பாளர்கள், மார்த்தா மற்றும் மரியா ஆகிய இருவரின் முன்மாதிரியும் தங்களுக்கு அவசியம் எனப் புரிந்துகொண்டதாகக் கருத்துரைத்தனர். பரபரப்பாகப் பணிகளில் ஈடுபடும் வேளையில் சுய தியானமும் அவசியம் என்பதை மறந்து வாழ்ந்ததை ஒரு குறையென எண்ணுவதாகவும் சிலர் கூறினர்.

அக்டோபர் 5-7 வரை நடைபெற்ற இந்த ஆண்டு பொதுக்கூட்டமும் தியானமும் இந்த கோவிட்-19 காலத்தில் சோர்வு நீக்கி ஊக்குமூட்டும் நிகழ்வாக அமைந்தது என அனைவரும் கருதினர்.




> **சிந்தனைக்கு!**
>
> **பொல்லாரின் உள்ளத்தில் தீமையின் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது; அவர்களின் மனக்கண்களில் இறையச்சம் இல்லை. ஏனெனில் அவர்கள், குற்றம் வெளிப்பட்டு வெறுப்புக்கு உள்ளாகப் போவதில்லை என, இறுமாந்து தமக்குத்தாமே பெருமை பாராட்டிக்கொள்கின்றனர்.**
>
> **(-திருத்தந்தை பிரான்சிஸ் - 21-10-2020)**

## கடமையைச் செய், பலனை எதிர்பாராதே!

மன்னர் ஒருவர் முனிவரிடம், **"கீதையிலே, 'கடமையைச் செய், பலனை எதிர்பாராதே'** என்று கூறப்பட்டுள்ளது. நல்ல முறையில் ஆட்சி செய்யவேண்டியது என் கடமை. அதனை மக்கள் பாராட்டவேண்டும் என்று நினைப்பது தவறா?" என்று கேட்டார்.

முனிவர் அதற்கு, "உன் கேள்விக்குப் பதில் சொல்ல, நீ ஒரு வாரம் என் ஆசிரமத்தில் சாப்பிட வேண்டும்" என்றார்.

மன்னரும் அவ்வாறே அங்கு சாப்பிட்டு வந்தார். சாப்பாடு மிகவும் சுவையாக இருந்தது. அதை இரசித்து அவர் சாப்பிட்டார்.

ஒரு வாரம் முடிந்தவுடன் முனிவர் கேட்டார், "இங்கு சாப்பாடு எப்படி இருந்தது?"

மன்னரோ, "நானே சொல்லவேண்டும் என்று நினைத்தேன். சாப்பாடு மிகவும் அருமையாக இருந்தது. இதைச் சமைத்த சமையல்காரரை என் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, தலைமைச் சமையல் காராக நியமிக்கப்போகிறேன்" என்றார்.

முனிவர் சொன்னார், "சுவையாக சமைக்க வேண்டியது, ஒரு சமையல்காரரின் கடமை. இந்தச் சமையல்காரர் தன் கடமையைச் செய்தார். இப்போது அவருக்கு அரண்மனையில் வேலை கிடைத்துவிட்டது. கடமையைச் சரியாக செய்தவருக்கு அதற்கான பலன் கண்டிப்பாகத் தேடிவரும்" என்றார் முனிவர்

ஆம். ஆசையின் அடுத்த நிலைதான் எதிர்பார்ப்பு. ஆசைக்கு அளவில்லை. பலனை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டால், நம்மால் அந்தச் செயலில் நிச்சயம் வெற்றிபெற இயலாது. சரியாகச் செய்தால் அதற்கான பலன் நமக்குக் கிடைப்பதை, யாராலும் தடுக்க முடியாது.

# அன்பே கடவுள் - வாழ்வதே தவம்

இன்றைய வாசகங்களின் மையக் கருத்து அன்பு. இன்றைய முதல் வாசகத்தில் (விப.22:23-24) இறைவன் இஸ்ராயேல் மக்கள் மீது கோபம் கொள்கிறார். 'என் சினம் பற்றியெரியும்', 'என் வாளுக்கு இரையாக்குவேன்', 'உங்கள் மனைவியர் விதவைகளாவர்' 'உங்கள் பிள்ளைகள் தந்தையற்றோர் ஆவர்' என இறைவன் எச்சரிக்கிறார். வார்த்தைகளை நெருப்புக் கனலாக அள்ளி வீசும் இறைவன், இரண்டாவது வாசகத்தில் (1தெச.1:5-10) சாந்தமாக பேசுகிறார். தெசலோனியர்கள் தங்களது பழைய வாழ்க்கைமுறையை விடுத்து, இயேசுவில் வாழத் தொடங்கி விட்டதை புனித பவுல் பாராட்டுகிறார். நற்செய்தியில் (மத்தேயு22:34-40) அன்பே உருவான இயேசுவிற்குக் கோபமூட்டி, மடக்கி குற்றஞ்சாட்ட சதிக்காரர்கள் திட்டமிடுகின்றனர். கடந்த வார நற்செய்தி வாசகத்தைக் கவனித்தால், அவர்களின் சூழ்ச்சி தெரியும். இயேசுவை தங்களது வலையில் சிக்க வைக்க அவர்கள் தொடுக்கும் கடைசி கேள்விகளாக இவை மூன்றும் இருக்கின்றன. முதல் கேள்வியைப் பரிசேயர்கள் கேட்கின்றனர். 'சீசருக்கு வரி செலுத்துவது முறையா?'. இரண்டாவது கேள்வியைச் சதுசேயர்கள் கேட்கின்றனர். உயிர்த்தெழுதல் பற்றி கேட்கின்றனர். மூன்றாவது கேள்வியைப் (இன்றைய நற்செய்தி) பரிசேயர்கள் கேட்கின்றனர். 'தலைசிறந்த கட்டளை எது?'. மோசே கொடுத்தப் பத்துக்கட்டளைத் தவிர, யூதர்களுக்கு அறுநூற்றுக்கும் அதிகமான கட்டளைகள் உண்டு. இந்த சட்டங்களைக் கொண்டு அப்பாவி மக்களை கசக்கிப் பிழிந்து, சுரண்டுவது இவர்களின் (பரிசேயர்கள்/சதுசேயர்கள்) வேலை. அவர்களின் கேள்விக்குப் பதிலாக மோசே கொடுத்த முதல் கட்டளையை இயேசு கூறுகிறார். 'உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக' (இ.ச.6:5). அவர்களின் சூழ்ச்சியில் சிக்காமல் இருப்பதற்கு மோசே கட்டளையை மீண்டும் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஏனெனில் மோசே சட்டத்தை ஒவ்வொரு யூதனும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அத்தோடு நின்றுவிடவில்லை மக்களோடு வாழ வந்த கடவுள், 'உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' எனக் கூறுகிறார்.

கல்வாரி மலையில் கைகளை விரித்துப் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர் கொடுத்தக் கட்டளைகள் இரண்டு மட்டுமே. தந்தையாகிய கடவுளுக்கு தமது உடல், பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த இயேசு, இரு கரங்களை விரித்தப்படியே இறந்தது, நம் அனைவரையும் அரவணைப்பதற்காக! முழு மனத்தோடு கடவுளை அன்பு செய்கிறேன் என்ற முதல் கட்டளை ஒப்புவித்தால், இரண்டாவது கட்டளையை நாம் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். ஏனெனில், இரண்டாவது கட்டளை முதல் கட்டளைக்கு இணையானது (மத்.22:39-40) என்றும் இதுவே அடிப்படை என்றும் இயேசு கூறுகிறார். எனவே சரியான புரிதலுடன் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அன்புதான். அன்போடு நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் விண்ணகப் பாதைக்கு இட்டுச் செல்லும் (மத்.25:36). அவ்வாறு வாழ்வதே தவம்!

*அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்*

> **பொதுக்காலம் 30-ஆம் ஞாயிறு**
>
> விப 22: 21-27
> திபா 18: 1-2a. 2bc-3,46,50 .
> 1 தெச 1: 5c-10
> மத் 22: 34-40
>
> **ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
> **வாரநாள் முதல் வாசகம்: 2**
> **திருப்புகழ் மாலை : வாரம் 2**